**செய்தி வெளியீடு எண்.327** 12.04.2010

## ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் ஆய்வு.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் மாநில அளவிலான பத்தாவது ஒப்பளிப்புக் கூட்டம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (12.04.2010) மாலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஒப்பளிப்புக் குழுவில் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.3900.94 கோடிகளில் 39 திட்டங்களையும் மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு ரூ.838.52 கோடிகளில் ஒப்பளிக்கப்பட்ட 8 திட்டங்களையும் மற்றும் கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.826.20 கோடி மதிப்பிலான 5 திட்டங்கள் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.

திட்டங்களுடைய தற்போதைய நிலை குறித்து விரிவான ஆய்வு நடத்திய மாண்மிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் திட்டங்களை குறித்த காலத்தில் முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக் கூட்டத்தில் ரூ.195.35 கோடிக்கான 4 புதிய திட்டங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெற பரிந்துரை செய்யப்பட்டது.

| வரிசை எண் | திட்டங்களின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| 1. | கோயம்பேடு பகுதியில் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்துதல் | 130.00 |
| 2. | மணப்பாக்கம் கிராம பஞ்சாயத்தில் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்துதல் | 10.44 |
| 3. | மணப்பாக்கம் கிராம பஞ்சாயத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்துதல் | 26.86 |
| 4. | தகவல் தொழில் நுட்ப சாலையில் 14 உந்து நிலையங்கள் மற்றும் அதன் தொடர்புடைய மின்னணு வேலைகளை ஏற்படுத்துதல் | 28.05 |
| | **மொத்தம்** | **195.35** |

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் கழிவுநீர் சுத்திகரிப்புத் தேவையை கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு120 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.130 கோடி மதிப்பீட்டில் கோயம்பேட்டில் ஏற்படுத்தப்படுகிறது.

சென்னை நகரை ஒட்டியுள்ள மிக வேகமாக வளர்ந்து வருகிற ஊராட்சிகளில் மணப்பாக்கமும் ஒன்று. இதன் வளர்ச்சியையும் தேவையையும் கருத்தில் கொண்டு மக்களின் தேவையாகிய நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையிலும் 30 ஆண்டுகளுக்கு தொலைநோக்குடனும் ரூ.10.44 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மணப்பாக்கம் ஊராட்சியின் குடிநீர்த் திட்டத்தினால் வெளியேறும் கழிவுநீரை கருத்தில் கொண்டு ரூ.26.86 கோடியிலான பாதாளச் சாக்கடைத் திட்டம் 30 ஆண்டுகள் தொலைநோக்குடன் மணப்பாக்கம் ஊராட்சிக்கு வழங்கப்படுகிறது.

தகவல் தொழில் நுட்ப சாலையில் உள்ள உள்ளாட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கழிவுநீர் சாலையின் வழியாக வெளியேற்றுவதற்கு 14 உந்து நிலையங்கள் இன்றியமையாதது. இதனை கருத்தில் கொண்டு ரூ.28.05 கோடியில் 14 உந்து நிலையங்களும் அதனுடன் இணைந்த பணிகளும் செயல்படுத்த ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 12 உள்ளாட்சி பகுதிகள் பயன்பெறும்.

இக்குழுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, டுபிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திரு. எம்.ஏ.கௌரிசங்கர், திட்டம், வீட்டு வசதித் துறை செயலாளர், திரு அசோக் டோங்கரே, நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் செந்தில்குமார், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுவரன்சிங், சென்னை மாநகராட்சி இணை ஆணையர் திரு. ஆசிஷ் சாட்டர்ஜி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.